# தமிழ்த்திறனறித் தேர்வு

## இயல் 2 முழுவதும் வினா- விடை

1) மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர்

அ) தொல்காப்பியர் ஆ) திருமூலர் இ) திருவள்ளுவர் ஈ) பிற்கால ஒளவையார்

2) கீழ்வருவனவற்றுள் தவறானத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) மேற்கிலிருந்து வீசும் காற்றிற்குக் கோடை என்றுபெயர்.

ஆ) வடக்கிலிருந்து வீசும் காற்றிற்கு வாடைக்காற்று என்றுபெயர்.

இ) கிழக்கிலிருந்து வீசும் காற்றிற்குக் கொண்டல் என்றுபெயர்

ஈ) தெற்கிலிருந்து வீசும் காற்றிற்குப் பூங்காற்று என்றுபெயர்

3) வாயு வழக்கம் அறிந்து செறிந்தடக்கில்

ஆயுள் பெருக்கம்உண் டாம் - இத்தொடர் இடம்பெற்றது.

அ) ஒளவை குறள் -50 ஆ) ஒளவை குறள் - 51 இ) ஒளவை குறள் -49.
ஈ) ஒளவை குறள் -66

4) கீழ்வரும் காற்றினைப் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது ?

அ) கடல்பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்துவருவது சுழல்காற்று

ஆ) அதிக வலிமையோடு வீசுவது கோடை காற்று

இ) பனிப்பகுதியிலிருந்து வீசுவது ஊதைக்காற்று

ஈ) ஆறு,மலை தாண்டி இதமாக வீசுவது தென்றல் காற்று.

5) செந்தமிழின் பின்னுதித்த தென்றலே - என்று பாடியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) சொக்கநாதர் இ) கண்ணதாசன் ஈ) ஒளவையார்

6) சங்ககாலப் பெண்புலவர் வெண்ணிக்குயத்தியார், கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய பாடல்இடம்பெற்றது.

அ) புறநானூறு -66 ஆ) புறநானூறு-51. இ) புறநானூறு- 55 ஈ) புறநானூறு -24

7) சரியான பாடல் தொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) செந்தமிழின் பின்னுதித்த இளந்தென்றலே..

ஆ) வளிதொழில் ஆண்ட உறவோன் மருக

இ) வலி மிகின் வளி இல்லை

ஈ) வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்.

8) இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையினைத் தருவது...

அ) வடகிழக்குப் பருவக்காற்று ஆ) தென்கிழக்குப் பருவக்காற்று
இ) தென்மேற்குப் பருவக்காற்று ஈ) வடமேற்குப் பருவக்காற்று

9) தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலங்கள்

அ) அக்டோபர் - டிசம்பர் ; ஜூன் - செப்டம்பர் ஆ) ஜூன்- செப்டம்பர் ; அக்டோபர் - டிசம்பர் இ) ஜூன் - செப்டம்பர் ; செப்டம்பர் - டிசம்பர்
ஈ) செப்டம்பர் - டிசம்பர் ; ஜூன் - ஆகஸ்ட்.

10) வளி மிகின் வலி இல்லை - என்று பாடியவர்

அ) இளநாகனார் ஆ) வெண்ணிக்குயத்தி இ) ஐயூர் முடவனார் ஈ) கண்ணனார்

11) ......... மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று புறநானூறு கூறுகிறது.

அ) சுழல்காற்று ஆ) கடுங்காற்று இ) கீழ்காற்று ஈ) புயல்காற்று

12) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா.........இடம்பெற்றுள்ளது.

அ) முதல் ஆ) இரண்டாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்

13) உலகிலேயே அதிகளவு காற்றுமாசுபடுத்தும் நாடுகளில் இந்தியா..... ..இடம்பெற்றுள்ளது.

அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) ஐந்தாம்

14) காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோய் அல்லாதது ....

அ) தலைவலி. ஆ) காய்ச்சல் இ) வலிப்பு நோய் ஈ) இளைப்பு நோய்

15) இந்தியாவில் மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணங்களில் ........ இடம் பெறுவது காற்று மாசுபாடு.

அ) முதல் ஆ) இரண்டாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்

16) காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோயாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவிப்பது.....

அ) நுரையீரல் புற்றுநோய் ஆ) குழந்தைகள் மூளை வளர்ச்சி குறைவு இ) இதய நோய்கள் ஈ) கண் எரிச்சல்

17) குளிர்பதனப் பெட்டி முதலான இயந்திரங்களிலிருந்து வெளிவரும் நச்சுக்காற்று.

அ) குளோரோ புளோரோ கார்பன் ஆ) ஹைட்ரோ கார்பன் இ) நைட்ரஜன் ஈ) கந்தக டை ஆக்சைடு

18) கூற்று 1 : குளிர்பதனப் பெட்டி முதலான இயந்திரங்களின் பயன்பாட்டால் ஓசோன் படலம் பாதிக்கிறது.

கூற்று 2 ஓசோன் பாதிப்பால் மனிதர்கள் துன்பம் அடைகின்றனர்

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1,2 தவறு

19) கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழைபெய்யும்போது நீரில் கரைந்துவிடுவதால் ......... பெய்கிறது.

அ) கனமழை. ஆ) அமிலமழை இ) செயற்கைமழை ஈ) பனிமழை

20) ஓசோன் படலம் பாதிப்படைந்து புற ஊதாக் கதிர்கள் நேரடியாக தாக்குவதால் ஏற்படும் நோய்......

அ) கண்களும் தோலும் பாதிப்பு ஆ) மூளை வளர்ச்சி குறைவு இ) நரம்பு மண்டலம் பாதிப்பு ஈ) வயிற்றுவலி

21) ஹிப்பாலஸ் பருவக்காற்றினால் ஏற்படும் பயன்களுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

அ) விரைவாகப் பயணம் ஆ) கடல் வாணிகம் பெருகியது இ) அதிகமாக கப்பல்கள் சென்றன ஈ) முசிறியில் துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது.

www.Padasalai.Net

22) மாயங்கள் செய்கின்ற பூங்காற்றே! இத்தனை நாள்

உனைப் பாடாதிருந்து விட்டேன் - இக்கவிதையைத் தந்தவர்

அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன் இ) வா.மூர்த்தி ஈ) பாரதியார்

23) எந்நாட்டு மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடப்படுகிறது ?

அ) அயர்லாந்து ஆ) தாய்லாந்து இ) இங்கிலாந்து ஈ) போர்ச்சுகீசு

24) 17 ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழ்வது

அ) சரஸ்வதி மகால் ஆ) ரோம் மகால் இ) தாஜ்மகால் ஈ) வெள்ளைமாளிகை

25) பாரதியாரைப் பற்றிய பாராட்டுகளுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க

அ) பாட்டுக்கொரு கவிஞன் ஆ) சிந்துக்குத் தந்தை இ) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா ஈ) எட்டையபுர ஏந்தல்

26) கூற்று 1 : பாரதியார், குழந்தைகளுக்கான நீதிகளைப் பாடல்களில் தந்தவர்.

கூற்று 2 : இவர் இந்தியா, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் துணைஆசிரியராகப் பணியாற்றியவர்.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1,2 தவறு.

27) Prose Poetry என்பது தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

அ) மரபுக்கவிதை ஆ) புதுக்கவிதை இ) வசனகவிதை ஈ) யாப்புக்கவிதை

28) பக்க மலைகள் உடைந்து வெள்ளம் பாயுது பாயுது...இவ்வரிகளை எழுதியவர்

அ) வா.மூர்த்தி. ஆ) அப்துல்ரகுமான் இ) கண்ணதாசன் ஈ) பாரதியார்

29) கைதொழுது பெருமுதுபெண்டிர் நிற்ப - இதில் கைதொழுது என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) மூன்றாம் வேற்றுமைத்தொகை இ) ஆறாம் வேற்றுமைத்தொகை ஈ) பண்புத்தொகை

30) நடுங்கு சுவல் அசைத்த கையள் - இதில் சுவல் என்பதன் பொருள்

அ) தோள் ஆ) தோல் இ) மலை ஈ) முதுபெண்டிர்

31) வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை - இதில் உரிச்சொல் தொடர் அமைந்த சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) வலம்புரி ஆ) பொறித்த இ) மாதாங்கு ஈ) தடக்கை

32) வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை தொடங்கப்பெற்ற ஆண்டு

அ) 2000 ஆ) 2002 இ) 2004 ஈ) 2010

33) கஜா புயலின் பெயரைத் தந்த நாடு

அ) இந்தியா ஆ) இலங்கை. இ) ஓமன் ஈ) வங்கதேசம்

34) ஜல் புயல் சென்னைக்கு மேற்கே மையம்கொண்டுள்ளது - இதில் ஜல் என்பதன் பொருள்....

அ) அலை ஆ) ஐம்பூதங்கள் இ) வாயு. ஈ) நான்கு பூதங்கள்

35) பெய்ட்டி - என்ற புயலின் பெயரைத் தந்த நாடு

அ) வங்கதேசம் ஆ) இந்தியா. இ) தாய்லாந்து ஈ) இலங்கை

36) நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையைச் சிறப்பித்துப் பாடியசங்கநூல்

அ) புறநானூறு. ஆ) அகநானூறு. இ) கலித்தொகை. ஈ) பரிபாடல்

37) ப.சிங்காரம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வேலைக்காக இந்தோனேசியா சென்றார்.

ஆ) மதுரை மாவட்டம் சிங்கம்புணரியைச் சேர்ந்தவர்.

இ) இவரெழுதிய புதினம் புயலிலே ஒரு தோணி

ஈ) தினத்தந்தி நாளிதழிலில் பணியாற்றியுள்ளார்.

38) ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள்

அ) பெய்ட்டி புயல் ஆ) கஜா புயல் இ) இடம்புரிப்புயல் ஈ) வலம்புரிப்புயல்

39) உருபும் பயனும் உடன்தொக்க தொகை அமைந்த சொல்லைத் தேர்க.

அ) கரும்பு தின்றான் ஆ) செங்காந்தள். இ) தமிழ்த்தொண்டு ஈ) வெண்சங்கு

40) மலர்க்கை - இதிலுள்ள உவமேயத்தை எடுத்தெழுதுக

அ) போல ஆ) மலர் இ) அது ஈ) கை

41) இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்குச் சான்று தருக.

அ) தேர்ப்பாகன். ஆ) தைத்திங்கள் இ) இன்மொழி. ஈ) வட்டத்தொட்டி

42) இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறையாமல் வருவது

அ) உவமைத்தொகை. ஆ) உம்மைத்தொகை. இ) எண்ணும்மை ஈ) அன்மொழித்தொகை

43) பூக்களைத் தொட்டால் நறுமணத்தோடு வருகிறாய்

புல்லாங்குழலில் புகுந்தால் இசையாகிவிடுகிறாய் - இக்கவிதையின் ஆசிரியர்

அ) மேத்தா ஆ) அப்துல் ரகுமான் இ) வைரமுத்து. ஈ) வாலி

44) வயலின் பச்சைப் பயிர்கள் நீ வந்தால் மட்டுமே

ஆனந்த நடனம் ஆடுகின்றன - இக்கவிவரிகளில் நீ என்பது எதனைக் குறிக்கிறது?

அ) மழை ஆ) மயில் இ) வண்டு ஈ) காற்று

45) மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்

அ) பலாமலர் ஆ) ஆல மலர் இ) பாங்கர் மலர் ஈ) அத்தி மலர்

46) அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் அல்லாதது

அ) சுள்ளி மலர் ஆ) அத்தி மலர் இ) பலா மலர் ஈ) கொழிஞ்சி மலர்

47) இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. அப்பூவை மரத்தின் மீதேறி பறித்து உண்ணும் விலங்கு

அ) புலி ஆ) குரங்கு இ) சிறுத்தை ஈ) கரடி

www.Padasalai.Net

48) சிட்டுக்குருவியின் பட்டுப்போர்த்த வயிறு எந்த நிறத்தில் இருப்பதாகக் கூறியுள்ளார்?

அ) வெள்ளை ஆ) மங்கல் வெண்மை இ) கருமை ஈ) சாம்பல்

49) சிட்டுக்குருவியின் எந்தப்பகுதி கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தால் உள்ளது ?

அ) மூக்கு ஆ) வயிறு இ) கால்கள் ஈ) முதுகு

50) கீழ்வருவனவற்றுள் தவறானத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) அதோ அந்தப் பறவை போல - முகமது அலி

ஆ) உலகின் மிகச்சிறிய தவளை - ராமகிருஷ்ணன்

இ) புயலிலே ஒரு கடற்கூத்து - சிங்காரம்

ஈ) கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் - பாரதியார்.

விடைகள் :

1) ஆ 2) ஈ 3) இ 4) அ 5) ஆ 6) அ 7) ஈ 8) இ 9) ஆ 10) இ

11) ஆ 12)ஈ 13)ஆ 14)இ 15)ஈ 16)ஆ 17)அ 18)இ 19)ஆ 20)அ

21) ஈ 22)இ 23)ஆ 24)இ 25)அ 26)ஆ 27)இ 28)ஈ 29) ஆ 30)அ

31) ஈ 32)அ 33)ஆ 34)ஈ 35)இ 36)ஆ 37)ஆ 38)ஈ 39)இ 40)ஈ

41) ஆ. 42)இ 43)ஆ. 44)ஈ 45)இ 46)அ 47)ஈ 48)ஆ 49)ஈ 50)இ

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் ),

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி,

கும்பகோணம் -612001.

தொடர்புக்கு - 9443740120 . email : sjkavin08@gmail.com

www.Padasalai.Net